SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: குழைத்தபத்து**

**திருப்பெருந்துறையில் அருளியது**

* * * * *

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *

குழைத்தால் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி உண்டோ தான்
உமையாள் கணவா எனை ஆள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோ என்று
அழைத்தால் அருளாது ஒழிவதே
அம்மானே உன் அடியேற்கே.

அடியேன் அல்லல் எல்லாம்முன்
அகலஆண்டாய் என்றிருந்தேன்
கொடிஏர் இடையாள் கூறாஎம்
கோவே ஆஆ என்றருளிச்
செடிசேர் உடலைச் சிதையாது
ஏத்துக்கு எங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே.

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை

THIRUVASAGAM GROUP
Scan this QR code using the WhatsApp Camera to join this group

இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எம்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணம்ஆம் என்றே நீகொண்டால்
என்தான் கெட்டது இரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே.

மான்நேர் நோக்கி மணவாளா
மன்னே நின்சீர் மறப்பித்துஇவ்
ஊனேபுக என்தனை நூக்கி
உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளும்நாள்
என்றுஎன்று உன்னைக் கூறுவதே.

கூறும் நாவே முதலாகக்
கூறுங் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்புநீ
தீமை நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசுஇங்கு ஒன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்துஉரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ.

வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாதுஅருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டுஎன்னில்
அதுவும் உன்தன் விருப்புஅன்றே.

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்டபோதே கொண்டிலையோ

இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

நாயிற் கடைஆம் நாயேனை
நயந்துநீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட்டு இருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்னதோ இங்கு அதிகாரம்
காயத்து இடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

கண்ணார் நுதலோய் கழல்இணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணாது இரவும் பகலும்நான்
அவையே எண்ணும் அதுஅல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துஉன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
அடிமைசால அழகு உடைத்தே.

அழகே புரிந்திட்டு அடிநாயேன்
அரற்று கின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்குப்
புராணநீ தந்து அருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *